திருநெல்வேலியில் விமான நிலேயம்

* 247 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் விமான நிலேயம் துவக்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லே.

(இ) எழவில்லே.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலேவரவர்களே, திருநெல்வேலியில் விமான தளம் அமைக்க இனிமேலாவது உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலேவரவர்களே, இனிமேலும் என்று அல்ல, ஏற்கனவே பல முறை எழுதி கேட்டிருக்கிறோம். மத்திய அரசு ஒத்துக் கொள்ளவில்லே.

தேசிய நெடுஞ்சாலேகள் மேம்பாட்டுப் பணிகள்.

* 248 வின.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலேகள் அபிவிருத்திக்கென மத்திய அரசு, மாநில அரசுக்கு அளித்த தொகை எவ்வளவு ?

(இ) அதில் இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1973-74-ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலே அபிவிருத்திக்கென மத்திய அரசு, மாநில அரசுக்கு அளித்த தொகை ரூ. 397.00 இலட்சமாகும்.

(இ) 30—10—1973 முடிய ரூ. 186.49 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : தலேவரவர்களே, தேசிய நெடுஞ்சாலேகளுக்காக கொடுக்கப்படுகிற தொகையானது நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிகிறது. மேலும் அதிகமான தொகை வேண்டுமென்று முன்பு கேட்டிருக்கிறேன். அதற்குத் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ரூ. 8 கோடி

திட்டம் இருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசிடம் யோசனை ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ரூ. 8 கோடி திட்டம் என்பது மத்திய அரசிடமும் இல்லை, மாநில அரசிடமும் இல்லை. எந்த தகவலை வைத்துக் கொண்டு உறுப்பினர் இதைக் கூறுகிறார் என்று தெரியவில்லை. நான் விசாரித்த வரையில் அப்படி ஏதும் திட்டம் இருப்பதாகத் தகவல் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Works the total length of Highways roads in our State and also the basis on which the amount is allotted by the Centre to the States for improving such roads?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I want notice.

கவரைப்பேட்டை—சத்தியவேடு நெடுஞ்சாலை

*. 249 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி வட்டம், கவரைப்பேட்டை—சத்தியவேடு நெடுஞ்சாலையில் உள்ள குறுகலான கல்வெர்ட்டுக்களையும், சிறு பாலங்களையும் அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. கா வேழவேந்தன் : தலைவரவர்களே, அந்த நெடுஞ்சாலை ஆந்திர மாநிலத்துடன் இணைகின்ற ஒன்று. நெடுஞ்சாலையிலுள்ள கல்வர்ட்களும் பாலங்களும் மிகச் சிறியனவாக, குறுகலாக இருப்பதால் அவற்றை அகலப் படுத்த அரசிடம் திட்டமேதேனுமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிதி வருவாய் சரியாக இருக்குமானால் அதைப்பற்றி ஆராயலாம்.